பொதுச் சுற்றறிக்கை இல: 01-12/2019

FHB/SH/Gen/2018

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் காரியாலயம்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
'சுவசிரிபாய'

385, பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை
கொழும்பு-10
28. .01.2019

அனைத்து மாகாணச் சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
அனைத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பணிப்பாளர்கள், விசேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவனங்கள்
பணிப்பாளர், தேசிய சுகாதார விஞ்ஞான நிறுவகம்,
வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள், மருத்துவப் பொறுப்பதிகாரிகள்,
பிரதான வைத்திய அதிகாரிகள்- மாநகர சபைகள்,
அனைத்து தாய் சேய் நல வைத்திய அதிகாரிகள்,
அனைத்து சுகாதார வைத்திய அதிகாரிகள்,
பாடசாலை மருத்துவ அதிகாரிகள்.

**2019ம் ஆண்டு முதல் பாடசாலை மாணவர்களுக்கான நுண்போசணை குறைநிரப்பல் வழங்கல்**

பாடசாலை மாணவர்களுக்கான இரும்பு போலிக்கமில குறைநிரப்பல் வழங்கல் தொரடர்பான 25.03.2013 திகதிய 02/08/2007(1) இலக்கப் பொதுச்சுற்றிக்கை மற்றும் 13.01.2015 ம் திகதிய கடிதம் என்பனவற்றை பிரதியீடு செய்கின்றது. இது 01.01.2019 முதல் அமுல்படுத்தப்படும்.

வாராந்த இரும்பு போலிக்கமிலம் மற்றும் விட்டமின் C குறைநிரப்பு வழங்கல் நிகழ்ச்சித்திட்டம் (WIFS) ஆனது 2013ம் ஆண்டு தரம் 1 முதல் தரம் 13 வரையான அனைத்து மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டமானது உடலில் இரும்புச்சத்தின் (ferritin) சேமிப்பு மட்டத்தை அதிகரிப்பதையும் பாடசாலை மாணவர்களில் குருதிச்சோகை ஏற்படுவனைத் தடுப்பதையும் நோக்கமாக கொண்டு, ஆய்வுகளின் ஆதாரத்தை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்பட்டது.

2017ம் ஆண்டு மருத்துவ ஆய்வு நிறுவகத்தினால் நடத்தப்பட்ட தேசிய போசாக்கு மற்றும் நுண்போசாக்கு ஆய்வின்படி, கடந்த 10 வருடங்களில் குருதிச்சோகையின் அளவு குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளது. விட்டமின் A குறைபாட்டின் அளவு, பாடசாலை செல்லும் 10-19 வயதுடைய யௌவனப்பருவத்தினரில் 1.0% மாக உள்ளது.

2013ம் ஆண்டு முதல் குடற்புழுத் தொற்று தடுப்பு இவ் WIFS நிகழ்ச்சித்திட்டத்துடன் சேர்த்து, அனைத்து தரம் 1 முதல் 13 வரையான மாணவர்கள் அவர்கள் வாழ்கின்ற பிரதேசத்தின் குடற்புழுத்தொற்றின் உயர் மற்றும் நடுத்தர ஆபத்து நிலைமைகளுக்கு ஏற்ப வருடத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை பொதுச்சுற்றிக்கை இல 02-172/2012 ஏற்ப வழங்கப்படுகின்றது. இந்தச் சுற்றுநிருபமானது 14.12.2018 ந் திகதியிடப்பட்ட 01-58/2018 ம் இலக்க பொதுச் சுற்றுநிருபத்தினால் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பாடசாலை மாணவர்களுக்கான குடற்புழுக்களைத் தடுப்பதற்கான மருந்து வழங்கலுக்கான பரிந்துரைகளும் 01.01.2019 இருந்து அமுலுக்கு வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

புதிதாக செய்ப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக் குழுவானது, மாவட்டங்களில் நிலவும் குடற்புழுத் தொற்றின் வீதத்தை அடிப்படையாகக் கொண்டு அவற்றை வகைப்படுத்தியதுடன் 2019-2022ம் ஆண்டிற்கான மூலோபாய திட்டத்தை பின்வரும் பரிந்துரைகளுடன் திருத்தியமைத்தது. இப்பரிந்துரைகள் 2019ம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படவுள்ளன.

**பாடசாலை மாணவர்களுக்கான நுண்போசணை குறைநிரப்பு வழங்கல் மற்றும் குடற்புழுத்தொற்று சிகிச்சை நிகழ்ச்சித் திட்டத்திற்கான பரிந்துரைகள்**

1. குருதிச்சோகையின் குறைந்தளவு பரம்பல் மற்றும் எதிர்வரும் காலங்களில் பாடசாலையில் வழங்கப்படும் உணவிற்கு மேலதிக இரும்புச்சத்து சேர்த்தல் என்பனவற்றை கருத்தில்கொண்டு, **தரம் 1-5 வரையுள்ள சிறுவர்களுக்கு மூலக இரும்பின் அளவை வாரத்திற்கு 60mg இருந்து 30mg வரை குறைப்பதற்கும் தரம் 6-13 வரையான மாணவர்களுக்கு 60mg** ஆகவும் 2019ம் ஆண்டு முதல் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது நாடாளவிய ரீதியில் வழங்கப்படவுள்ளதால் இவற்றின் தரம், பாதுகாப்பு மற்றும் இலகுவான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காகும், வாரந்த தேவைக்கான ஒரு குளிசையை இலகுவாக அகற்றவும், இக்குளிசைகளை 24 குளிசைகள் உள்ள (ஒரு மாணவர்க்கு ஒரு வருடத்திற்கு தேவையான அளவு) ஒட்டு குளிசை மட்டையாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. யௌவனப் பருவத்தினரில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி விட்டமின் A குறைபாடு ஒரு பொதுவான சுகாதாரப்பிரச்சனையாக தற்போது கருதப்படாததால் மற்றும் சந்தையிலுள்ள உணவுப்பொருட்களில் விட்டமின் A மேலதிகமாக சேர்க்க ஊக்குவிக்கப்படுவதனாலும் **விட்டமின் A மெகா குறைநிரப்பு வழங்கலை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.**
3. பாடசாலை மாணவர்களுக்கான குடற்புழுத் தொற்றுக்கான மீளாய்வு செய்யபபட்ட மூலோபாயம் 2019-2022ன் படி, இக்குடற்புழுத்தொற்று சிகிச்சையானது **தரம் 1-5 வரையான பிள்ளைகளுக்கு மட்டுமே வழங்கப்படும். தரம் 6-13 வரையான மாணவர்கள் இந்நடைமுறையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனர்.**

I. **அதிக ஆபத்துள்ள மாவட்டங்கள்**
நுவரெலியா மற்றும் கொழும்பு
குடற்புழுத்தொற்று சிகிச்சை நிகழ்ச்சித்திட்டம் 4 **வருடங்களுக்கு** (2019-2022) வழங்கப்பட்டு பின்பு நிறுத்தப்படும்.

II. **இடைநிலை ஆபத்துள்ள மாவட்டங்கள்**
கண்டி, மாத்தளை, கம்பஹா, களுத்துறை, பொலனறுவை, புத்தளம், திருகோணமலை, அம்பாரை, கல்முனை, யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைதீவு, பதுளை, மொனராகலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, கேகாலை மற்றும் இரத்தினபுரி
குடற்புழுத்தொற்று சிகிச்சை நிகழ்ச்சித்திட்டம் **2 வருடங்களுக்கு** (2019 ஆரம்பத்திலிருந்து – 2020 இறுதி வரை) வழங்கப்பட்டு பின்பு நிறுத்தப்படும்.

III. **குறைந்த ஆபத்துள்ள மாவட்டங்கள்**
அநுராதபுரம், குருநாகல் மற்றும் மட்டக்களப்பு
நடைமுறையிலுள்ள **குடற்புழுத்தொற்று சிகிச்சை வழங்கப்படத் தேவையில்லை.**

நோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு தனிப்பட்ட சிகிச்சையானது பரிந்துரைக்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 'சமூக அமைப்பில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித்தாய்மார்களிடையே மண்மூலம் பரம்பலடையும் குடற்புழுக்களை ஒழித்தல்' தொடர்பான 14.12.2018 ந் திகதியிடப்பட்ட 01-58/2018 ம் இலக்க பொதுச் சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

**இந்நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான பொதுச் சுகாதார ஊழியர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

1. தமது நிர்வாக எல்லைக்கு உட்பட்ட பாடசாலைகளிலுள்ள மாணவர்களுக்கு எதிர்வரும் வருடத்திற்கு தேவையான மாத்திரைகளின் தொகையினை, இணைய மூலமான தகவல் தரவு அமைப்பில் (Pronto / Web portal ) பதிவு செய்வது சுகாதார வைத்திய அதிகாரியின் பெறுப்பாகும். மாவட்டத்திற்கான தரவுகளை மாவட்ட தரவகாக ஒன்றாக்க வேண்டியது மாவட்ட மருந்தாளரின் கடமையாகும். அத்தரவினை அத்தாட்சிப்படுத்த வேண்டியது தாய், சேய் நல வைத்திய அதிகாரியின் கடமையாகும்.
2. பிராந்திய மருந்து விநியோக பிரிவிற்கு தேசியமருந்து விநியோக பிரிவினால், தாய், சேய் நல வைத்திய அதிகாரி மூலம் விண்ணப்பிக்கப்பட்ட தேவையானளவு மாத்திரைகள் விநியோகிக்கப்படும்.
3. மாவடத்திற்குத் தேவையான மாத்திரைகள் தேசிய மருந்து விநியோகப்பிரிவிலிருந்து பிராந்திய மருந்து விநியோகப்பிரிவிற்கு கிடைக்கப்பெற்றது என்பதனையும் அறிவுறுத்தல்களுக்கான துண்டுப்பிரசாரம் குடும்ப சுகாதார பணியக்த்திலிருந்து கிடைக்கப்பெற்றது என்பதனையும் தாய் சேய் நல வைத்திய அதிகாரி மற்றும் சமூதாய மருத்துவ நிபுணர் உறுதிப்படுத்த வேண்டும்.
4. சுகாதார வைத்திய அதிகாரி அதிபர்களின் கூட்டத்திற்கு சமூகமளிப்பதுடன், 2019 ம் ஆண்டு முதல் வாராந்த இரும்பு போலிக்கமில குறைநிரப்பல் நிகழ்ச்சித் திட்டத்திலுள்ள மாற்றங்களைப்பற்றி கலந்துரையாட வேண்டும்.
5. மேற்பார்வை செய்யும் பொது சுகாதார பரிசோதகர், பொது சுகாதார பரிசோதகர்கள், ஏனைய பொதுச் சுகாதார ஊழியர்கள், பாடசலை சமூகம் மற்றும் பெற்றோருக்கு சுகாதார வைத்திய அதிகாரி இவ் நிகழ்ச்சித்திட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி அறிவுறுத்தவும். பாடசாலை ஊழியர்களுக்கான அறிவுறுத்தல்கள் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்தின் மூலம் வழங்கப்படும்.
6. சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் மாணவர்களால் பொதுவாக கூறப்படுகின்ற குமட்டல், வாந்தி, தலையிடி, கருமை நிறமான மலம் மற்றும் மலச்சிக்கல் போன்றனவற்றை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பொதுவாக இந்த விளைவுகள் ஓர் இரு நாட்களில் குணமாகிவிடும். இந்த அறிகுறிகள் மிகவும் அதிகமாகவோ அல்லது நீண்ட நாட்களுக்கு இருப்பின் மருத்துவ ஆலோசனையை நாட வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும்.
7. சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் 6 மாதங்களுக்குத் தேவையான மாத்திரைகள், துண்டுப்பிரசுரம், பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான வழிகாட்டி மற்றும் மருந்து விநியோகப் படிவம் என்பனவற்றை ஓரே தடவையில் பாடசாலை அதிபர்களிடம் வழங்கவேண்டும்.
8. சுகாதார வைத்திய அதிகாரி அல்லது பொது சுகாதார பரிசோதகர் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரம் அனைத்து மாணவர்களுக்கும் குறைநிரப்பல் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக கிடைக்கப்பெற்றுள்ளதா என்பதனை உறுதி செய்ய வேண்டும்.
9. வாராந்த இரும்பு போலிக்கமில குறைநிரப்பல் திட்டத்திற்கான மாத்திரைகளை கொள்வனவு செய்தல் குடும்ப சுகாதார பணியகத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் மேற்கொள்ளப்படும்.

10. இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான தொடர் கண்காணிப்பினை பாடசாலை மட்டத்தில் நடாத்துவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் ஆசிரியர்களால் நிரப்பப்பட்ட அட்டவணை 3 (இந்த சுற்றுநிருபத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) இனைச் சேகரித்து ஒன்றாக்க வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்களை அறிவுறுத்த வேண்டும். நுகர்வு பரம்பல், பாதாகமான விளைவுகள், சேவையின் பரம்பல் தன்மை என்பன ஆராய்யப்பட்டு சுகாதார வைத்திய அதிகாரியிடம் வழங்கப்பட வேண்டும். சு.வை.அ தனக்குரிய பிரதேசத்திற்குரிய அனைத்து தரவுகளையும் ஒன்றிணைக்க வேண்டும்.
11. குடும்ப நல உத்தியோகத்தர் பாடசாலை செல்லாத யௌவன பருவத்தினருக்கு தமது வீட்டுத்தரிசிப்பின் போது வாராந்த இரும்பு போலிக்கமில குறைநிரப்பலை மேலே கூறப்பட்ட முறைப்படி 6-10 வயது மற்றும் 11-19 வயது என இரு வேறு முறைகளாக வழங்கவேண்டும். மென்று விழுங்கக்கூடிய மெபண்டசோல் மாத்திரையானது 6-10 வயதான சிறுவர்களுக்கு மாத்திரம் வழங்க வேண்டும்.
12. நோய் அறிகுறிகளுள்ள குடற்புழுத் தொற்றுள்ளவர்கள் நோய்க்கான உரிய சிகிச்சை முறைப்படி பெற வேண்டும்.
13. சமுதாய மருத்துவ நிபுணர் / தாய் சேய் வைத்திய அதிகாரி தனது மாவட்டத்தில் வாரந்த இரும்பு போலேட் குறைநிரப்பு வழங்கலானது சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதனைக் கண்காணிக்க வேண்டும். எதாவது பிரச்சனைகள் காணப்படுமாயின் அது தொடர்பாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு / குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

**மீளாய்வு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான 2019 ம் ஆண்டிற்கான இரும்பு போலேற் வழங்கும் முறை**

**தரம் 1-5 வரையான மாணவர்களுக்கு**

- பெரஸ் பியூமாரேட் (91.2mg) + போலிக்கமிலம் (400µg) - இணைந்த குளிசை

ஒவ்வொரு குளிசையும் 30mg இரும்பு (மூலக இரும்பு) க்கு இணையான 91.2mg பெரஸ் பியூமரேட் மற்றும் 400µg போலிக்கமிலத்தையும் கொண்டுள்ளது.

தொடர் இல: SR00400504 பாடசாலைச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம் மட்டும் (ஆரம்பப்பிரிவு) என ஒவ்வொரு பொதியிலும் அச்சிடப்பட்டிருக்கும்.

விட்டமின் C - 100mg

மெபண்டசோல் - 500mg - மெல்லக்கூடிய, விரைவாக கரையக்கூடிய ஒரு தடைவ மட்டும் வழங்கப்படும் குளிசை

- அதிக மற்றும் இடைநிலை ஆபத்துள்ள மாவட்டங்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும். (மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள்)

தரம் 6-13 வரையான மாணவர்களுக்கு

- பெரஸ் பியூமாரேட் (182.4mg) + போலிக்கமிலம் (400µg) - இணைந்த குளிசை

  ஒவ்வொரு குளிசையும் 60mg இரும்பு (மூலக இரும்பு) க்கு இணையான 182.4mg பெரஸ் பியூமரேட் மற்றும் 400µg போலிக்கமிலத்தையும் கொண்டுள்ளது.

  தொடர் இல: SR00400505 பாடசாலைச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம் மட்டும் (இரண்டாம் நிலைப்பிரிவு) என ஒவ்வொரு பொதியிலும் அச்சிடப்பட்டிருக்கும்.

- விட்டமின் C - 100mg

பாவனைக்கான அறிவுறுத்தல்கள்

1. மெபண்டசோல் (500அப) மாத்திரை ஒன்று இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட வேண்டும். அதிக மற்றும் இடைநிலை ஆபத்துள்ள மாவட்டங்களில் தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும். இந்த மாத்திரையை நன்கு மென்ற பின்னரே விழுங்க வேண்டும். தரம் 1 இல் கல்விகற்கும் மாணவர்களில், குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பிணியாய்வு நிலையத்தில் கடந்த ஒரு வருடத்திற்குள் மெபன்டசோல் மாத்திரையை பெற்றுக்கொண்டவர்களுக்கு வழங்கப்படாதிருப்பதை உறுதிசெய்யவும்.
2. ஒவ்வொரு மாணவரும் ஒரு பெரஸ்பியூமரேட் மற்றும் போலிக்கமிலம் இணைந்த குளிசை மற்றும் ஒரு விட்டமின் ஊ குளிசை என்பனவற்றை வாராந்தம் பெற்றுக்கொள்வர். பெரஸ்பியூமரேட் மற்றும் போலிக்கமிலம் இணைந்த குளிசைகள் 24 உள்ள ஒட்டு அட்டைகளாக பொதி செய்யப்பட்டுள்ளன. இக்குளிசைகளின் வழங்கலானது இரண்டு வகையான அளவுகளில் வழங்கப்படுவதால் மிகவும் அவதானமாக மேற்பார்வை செய்யப்படவேண்டும்.
3. இக்குளிசை வழங்கலானது அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் வாராந்த குறைநிரப்பல் வழங்கலாக தொரடர்ச்சியாக ஒரு வருடத்தின் 24 வாரங்களுக்கு (6 மாதங்கள்) வழங்கப்பட வேண்டும்.
4. அனைத்து மாணவர்களும் காலை உணவை எடுத்த பின்னரே இந்த மாத்திரைகளை போதுமானளவு நீருடன் விழுங்க வேண்டும்.
5. விட்டமின் யு மெகா குறைநிரப்பு வழங்கள் 2019ம் ஆண்டு முதல் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படமாட்டாது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

Actg. Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

பிரதிகள்

செயளாளர், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

செயளாளர், கல்வி அமைச்சு

மேலதிக செயளாளர், (மருத்துவ சேவைகள்), சுகாதார அமைச்சு

மேலதிக செயளாளர், (கல்வித்தர வளர்ச்சிப் பிரிவு), கல்வி அமைச்சு

பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், பொதுச்சுகாதாரம் 11, சுகாதார அமைச்சு

பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருந்து விநியோகப் பிரிவு, சுகாதார அமைச்சு

பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவ சேவைகள், சுகாதார அமைச்சு

மருத்துவ நிபுணர்களின் சங்கங்களின் தலைவர்கள்

பீடாதிபதிகள், மருத்துவ பீடங்கள்,

கல்விப் பணிப்பாளர், சுகாதாரம் மற்றும் போசணை, கல்வி அமைச்சு

கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி மற்றும் விளையாட்டு, கல்வி அமைச்சு

ஆணையாளர்- கொழும்பு மாநகர சபை, கண்டி மாநகர சபை

இணைப்பு 1

## பாடசாலை மாணவர்களுக்கான நுண்போசணை குறைநிரப்பல் வழங்கல்

## பாடசாலை அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான வழிகாட்டல்

பாடசாலை மாணவர்கள், வாராந்த இரும்பு போலிக்கமில குறைநிரப்பலினால் ஏற்படும் நன்மைகளை தொடர்பாக வகுப்பாசிரியரினால் அல்லது பொதுச் சுகாதார பரிசோதகரினால் அறிவுறுத்தப்பட வேண்டும்.

- குருதியில் பெரிட்டீன் அளவை அதிகரித்தல்
- பௌதீக வளர்ச்சியையும் உள வளர்ச்சியையும் சீராக்குதல்
- நோய்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை குறைத்தல்
- கற்றல் செயற்பாட்டை ஊக்குவித்தல்

தரம் 1 முதல் 13 வரை கற்கின்ற மாணவர்கள் பின்வரும் முறைகளுக்கமைவாக வாராந்த இரும்பு போலிக்கமில குறைநிரப்பல் வழங்கப்பட வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்கான மாற்றியமைக்கப்பட்ட வழங்கும் முறையானது **2019 ம் ஆண்டிலிருந்து** நடைமுறைப்படுத்தப்படும்.

### தரம் 1 முதல் 5 (வயது 6-10) வரையான மாணவர்கள்

- பெரஸ் பியூமாரேட் (91.2mg) + போலிக்கமிலம் (400µg) - இணைந்த குளிசை

  ஒவ்வொரு குளிசையும் 30mg இரும்பு (மூலக இரும்பு) க்கு இணையான 91.2mg பெரஸ் பியூமரேட் மற்றும் 400µg போலிக்கமிலத்தையும் கொண்டுள்ளது.

  தொடர் இல: SR00400504 (பாடசாலைச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம்- ஆரம்பப்பிரிவு மாணவர்கள்- தரம் 1-5

- விட்டமின் C - 100mg
- மெபன்டசோல் - 500mg - அதிக மற்றும் இடைநிலை ஆபத்துள்ள மாவட்டங்களுக்கு மட்டும் (மட்டக்களப்பு, குருநாகல் மற்றும் அநுராதபுரம் தவிர்ந்த ஏனைய மாவடங்கள்) மெல்லக்கூடிய, விரைவாக கரையக்கூடிய ஒரு தடைவ மட்டும் வழங்கப்படும்.

### தரம் 6 முதல் 13 (வயது 11-19) வரையான மாணவர்கள்

- பெரஸ் பியூமாரேட் (182.4mg) + போலிக்கமிலம் (400µg) - இணைந்த குளிசை

  ஒவ்வொரு குளிசையும் 60mg இரும்பு (மூலக இரும்பு) க்கு இணையான 182.4mg பெரஸ் பியூமரேட் மற்றும் 400µg போலிக்கமிலத்தையும் கொண்டுள்ளது.

  தொடர் இல: SR00400505 (பாடசாலைச் சுகாதார நிகழ்ச்சித்திட்டம்- இரண்டாம்நிலை மாணவர்கள்- தரம் 6-13

- விட்டமின் C - 100mg

### புதிய மருந்து பாவனைகான அறிவுறுத்தல்கள்

1. மெபண்டசோல் (500mg) மாத்திரை ஒன்று இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட வேண்டும். அதிக மற்றும் இடைநிலை ஆபத்துள்ள மாவட்டங்களில்

தரம் 1 முதல் 5 வரையான மாணவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும். இந்த மாத்திரையை நன்கு மென்ற பின்னரே விழுங்க வேண்டும். தரம் 1 இல் கல்விகற்கும் மாணவர்களில், குழந்தைகள் மற்றும் சிறுவர்கள் பிணியாய்வு நிலையத்தில், கடந்த ஒரு வருடத்திற்குள் மெபன்டசோல் மாத்திரையை பெற்றுக்கொண்டவர்களுக்கு வழங்கப்படாதிருப்பதை உறுதிசெய்யவும்.

2. ஒவ்வொரு மாணவரும் ஒரு பெரஸ்பியூமரேட் மற்றும் போலிக்கமிலம் இணைந்த குளிசை மற்றும் ஒரு விட்டமின் C குளிசை என்பனவற்றை வாராந்தம் பெற்றுக்கொள்வர். பெரஸ்பியூமரேட் மற்றும் போலிக்கமிலம் இணைந்த குளிசைகள் 24 உள்ள ஒட்டு அட்டைகளாக பொதி செய்யப்பட்டுள்ளன. இக்குளிசைகளின் வழங்கலானது இரண்டு வகையான அளவுகளில் குளிசைகள் வழங்கப்படுவதால் மிகவும் அவதானமாக மேற்பார்வை செய்யப்படவேண்டும்.
3. இக்குளிசை வழங்கலானது அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் வாராந்த குறைநிரப்பல் வழங்கலாக தொரடர்ச்சியாக ஒரு வருடத்தின் 24 வாரங்களுக்கு (6 மாதங்கள்) வழங்கப்பட வேண்டும்.
4. அனைத்து மாணவர்களும் காலை உணவை எடுத்த பின்னரே இந்த மாத்திரைகளை போதுமானளவு நீருடன் விழுங்க வேண்டும்.
5. விட்டமின் A மெகா குறைநிரப்பு வழங்கள் 2019ம் ஆண்டு முதல் அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் வழங்கப்படமாட்டாது.

**பாடசாலையில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

- வாரத்தில் வசதியான ஒரு தினம் இதற்காக ஒதுக்கப்பட வேண்டும். மாணவர்களின் பாடசாலை வரவு பதிவு செய்வதற்காக ஒவ்வொருவரினதும் பெயரை அழைக்கும் போது அவர்களுக்கான பெரஸ்பியூமரேட் மற்றும் போலிக்கமிலம் இணைந்த குளிசை மற்றும் விட்டமின் C வழங்கப்பட்டு அவை ஆசிரியரின் கண்காணிப்பில் நீருடன் விழுங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இவற்றை விழுங்குவதற்கு முன்னர் காலை உணவை எடுத்திருத்தல் அவசியமாகும்.
- இந்த இரு மாத்திரைகளும் ஒரு வாரத்திற்கு ஒரு தடவைப்படி தொடர்ச்சியாக 24 வாரங்களுக்கு வழங்கப்பட வேண்டும். வகுப்பாசிரியரின் கண்காணிப்பின் கீழ் வகுப்பு மாணவத் தலைவர் மருந்து விநியோக படிவத்தை நிரப்ப முடியும். அந்த நாளில் ஒரு மாணவர் வாராதவிடத்து உரிய கூட்டனுள் 'ab' என நிரப்பப்பட்டு அந்த வாரத்தின் ஏதாவது ஒரு நாளில் அந்த மாணவனுக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டு மீண்டும் அந்த கூட்டினுள் (✓) என அடையாளம் இடப்பட வேண்டும்.
- அனைத்து மாணவர்களுக்கும் அறிவுறுத்தல்களைக் கொண்ட துண்டுப்பிரசுரம் இந்த குறைநிரப்புத்திட்டத்தின் ஆரம்பத்தில் வழங்கப்பட்டு அவர்கள் துண்டுப்பிரசுரத்திலுள்ள அட்டவணையை அவர்களாகவே மாத்திரைகள் கிடைக்கும் போதெல்லாம் நிரப்ப வேண்டும். மேலும் அவர்கள் அதனை வீட்டுக்கு எடுத்துச்சென்று அவர்களது சுகாதார பதிவேட்டுடன் இணைக்க முடியும். இதன் மூலமாக பெற்றோரும் இந்த நிகழ்ச்த்திட்டம் தொடர்பான விழிப்புணர்வை பெற்றுக்கொள்வர்.
- ஏதாவது மாத்திரைகள் தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை விநியோக படிவத்தின் முறைப்பாடுகள் என்ற நிரலில் நிரப்ப முடியும்.
- மாணவர்கள் குமட்டல், வாந்தி, தலையிடி, கருமை நிறமான மலம் மற்றும் மலச்சிக்கல் போன்ற பக்கவிளைவுகளை கூறலாம். இவை பொதுவாக ஓர் இரு நாட்களில் குணமடைந்துவிடும். இவை தீவிரமாகவும் பல நாட்களுக்கு நீடித்து இருப்பின் மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும்.
- மீதமுள்ள மாத்திரைகள் இறுக்கமாக மூடப்பட்டட கொள்கலனினுள் இட்டு பாதுகாப்பான இடத்தில் சேமித்து வைக்க வேண்டும்.
- பாடசாலை தவணைவிடுமுறைக் காலப்பகுதியில் பெற்றோரின் பங்களிப்புடன் குளிசைகள் வழங்கப்படவேண்டும்.

அட்டவணை 1

# பாடசாலை மாணவர்களுக்கான வாராந்த இரும்பு போலேட் குறைநிரப்பு வழங்கல் - விநியோகப் படிவம் - 20.....

பாடசாலையின் பெயர்:.............................................................................................

தரம் : .............................................. வகுப்பாசிரியரின் பெயர்: .........................................................

ஆரம்பித்த திகதி: .................................... முடிவடையும் திகதி............................மாத்திரையை விழுங்கிய பின்னர்✓ என புள்ளடியிடவும்

| | | |
|---|---|---|
| வயிற்று வலி | - | AP |
| குமட்டல்/ வாந்தி | - | V/N |
| மலச்சிக்கல் | - | C |
| ஏனையவை | - | குறிப்பிடுக |

| இல | மாணவரின் பெயர் | மெபண்டசோல் 500mg (மென்று விழுங்கக்கூடிய) | வாரங்கள் | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| | உ + ம்: க. குமரன் | | √ | √ | ab | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | √ | ab | √ | √ | √ | √ | √ | √ |
| | | | | N | | | | | | | | | | | | | | AP | | | | | | | | |
| 1. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 4. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 7. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 8. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 9. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 10. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 11. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 13. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 14. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 15. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 16. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 17. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 18. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 19. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 20. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 21. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 22. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 23. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 24. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 25. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 26. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 27. | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |